# செப்டம்பர் – 06 – வியாழன்

**புனித எலுதேசியுஸ்**

## “இது முதல் நீ மனிதரைப் பிடிப்பவன் ஆவாய்” – லூக்கா 5 : 10

## முதல் வாசகம் : 1 கொரிந்தியர் 3 : 18 – 23

சகோதர சகோதரிகளே! எவரும் தம்மைத்தாமே ஏமாற்றிக்கொள்ள வேண்டாம். இவ்வுலகில் தங்களை ஞானிகள் என்று கருதிக் கொள்வோர் தாங்களே மடையராகட்டும். அப்போது அவர்கள் ஞானிகள் ஆவார்கள். இவ்வுலக ஞானம் கடவுள்முன் மடமையாய் உள்ளது. ஏனெனில் மறைநூலில் எழுதியுள்ளவாறு, ”ஞானிகளைக் கடவுள் அவர்களது சூழ்ச்சியில் சிக்கவைப்பர்.” மேலும் ”ஞானிகளின் எண்ணங்கள் வீணானவை என ஆண்டவர் அறிவார்.” எனவே மனிதரைக் குறித்து யாரும் பெருமை பாராட்டலாகாது. பவுல், அப்பொல்லோ, கேபா, ஆகிய அனைவரும் உங்களுக்கு உரியவர்களே. அவ்வாறே உலகம், வாழ்வு, சாவு, நிகழ்காலம், எதிர்காலம் இவை அனைத்தும் உங்களுக்குரியவைகளே. ஆனால் நீங்கள் கிறிஸ்துவுக்குரியவர்கள் கிறிஸ்து கடவுளுக்குரியவர்.

**பதில்பாடல்:** மண்ணுலகும் அதில் நிறைந்துள்ளவை அனைத்தும் ஆண்டவருடையவை.

## நற்செய்தி : லூக்கா 5 : 1 - 11

அக்காலத்தில் ஒருநாள் இயேசு கெனசரேத்து ஏரிக்கரையில் நின்றுகொண்டிருந்தார். திரளான மக்கள் இறைவார்த்தையைக் கேட்பதற்கு அவரை நெருக்கிக்கொண்டிருந்தனர். அப்போது ஏரிக்கரையில் இரண்டுபடகுகள் நிற்கக்கண்டார். மீனவர் படகைவிட்டு இறங்கி, வலைகளை அலசிக்கொண்டிருந்தனர். அப்படகுகளுள் ஒன்று சீமோனுடையது. அதில் இயேசு ஏறினார். அவர் கரையிலிருந்து அதைச் சற்றேதள்ளும்படி அவரிடம் கேட்டுக் கொண்டு படகில் அமர்ந்தவாறே மக்கள் கூட்டத்துக்குக் கற்பித்தார். அவர் பேசி முடித்தபின்பு சீமோனை நோக்கி, ”ஆழத்திற்குத் தள்ளிக்கொண்டுபோய், மீன்பிடிக்க உங்கள் வலைகளைப் போடுங்கள்” என்றார். சீமோன் மறுமொழியாக, ”ஐயா, இரவுமுழுவதும் நாங்கள் பாடுபட்டு உழைத்தும் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆயினும் உமதுசொற்படியே வலைகளைப் போடுகிறேன்” என்றார். அப்படியே அவர்கள் செய்து பெருந்திரளான மீன்களைப் பிடித்தார்கள். வலைகள் கிழியத் தொடங்கவே, மற்றப்படகிலிருந்த தங்கள் கூட்டாளிகளுக்குச் சைகைகாட்டித் துணைக்குவருமாறு அழைத்தார்கள். அவர்களும் வந்து இருபடகுகளையும் மீன்களால் நிரப்பினார்கள். அவை மூழ்கும் நிலையிலிருந்தன. இதைக்கண்ட சீமோன் பேதுரு, இயேசுவின் கால்களில் விழுந்து, ”ஆண்டவரே, நான்பாவி, நீர் என்னை விட்டுப்போய்விடும்” என்றார். அவரும் அவரோடு இருந்த அனைவரும் மிகுதியான மீன்பாட்டைக்கண்டு திகைப்புற்றனர். சீமோனுடைய பங்காளிகளான செபதேயுவின் மக்கள் யாக்கோபும் யோவானும் அவ்வாறே திகைத்தார்கள். இயேசு சீமோனை நோக்கி, ”அஞ்சாதே் இதுமுதல் நீ மனிதரைப் பிடிப்பவன் ஆவாய்” என்றுசொன்னார். அவர்கள் தங்கள் படகுகளைக் கரையில் கொண்டுபோய்ச் சேர்த்தபின் அனைத்தையும் விட்டுவிட்டு அவரைப் பின்பற்றினார்கள்.

**தியானம்:** கடவுள் எம்மைக் கைவிட்டு விட்டாரா என நாம் தவறாக அர்த்தமுற்று அங்கலாய்க்கும் வேளையிலும் எல்லாம்வல்ல மூவொரு இறைவனின் அளவுகடந்த கிருபையும் மாறத அன்பும் எமக்கு அருகில் இருப்பது மட்டுமல்ல “எமது பெலவீனத்திலும் இறைவனின் பெலன் அதிகமாக விளங்கும்” என்ற உண்மையையும் இன்றைய நற்செய்தி எமக்குப் படிப்பிக்கின்றது. இன்றைய நற்செய்தியை ஒரு கடற்கரையோரக் காலைக்காட்சிபோல நாம் எமது மனக்கண்களில் ஓட விடுவோமாயின் பின்வருமாறு அந்தநிகழ்ச்சியைக் காணலாம். இரவுமுழுவதும் கண்விழித்தும் மீன்பாடு அகப்படாது ஏமாந்த சீமோன் பேதுருவும் அவரது நன்பர்களும் ஒருபக்கம். இறைமகன் இயேசுவின் போதனையைக்கேட்க வந்த மக்கள் கூட்டம் மறுபக்கம். இவர்களின் நடுவே படகில் அமர்ந்தவாறு போதிக்கும் ஆண்டவர் இயேசு நிற்கின்றார். அவ்வேளையில் பேதுரு போன்று நாம் அங்கே நின்றிருப்பின் எமதுபடகில் ஆண்டவர் இயேசு ஏறவிட்டிருப்போமா? அல்லது மீண்டும் மீன்பிடிக்க ஆழத்திற்குத் தள்ளிக்கொண்டு எமது படகைக் கொண்டுபோயிருப்போமா? படிப்பறிவற்ற பேதுரு இறைவார்த்தைக்குக் கட்டுப்பட்டதால் அன்று அதிகம் மீன்களை மாத்திரம் பிடிக்கவில்லை, மாறாக, இறைமகன் இயேசுவின் இதயத்திலும் இடம்பிடித்து திருச்சபையைக் கட்டியெழுப்பும் பாறையாகவும் உயர்த்தப்பட்டார். அவ்வாறே ஆண்டவர் இயேசு இன்றும் தமது திருச்சபைக்கு மனிதரைப் பிடிப்பதற்கு ஆட்களைத் தேடியவாறு இருக்கின்றார் என்பதனை நாம் நம்புகின்றோமா? பேதுரு போன்று எமது நிபந்தனையற்ற பங்களிப்பினை ஆண்டவர் இயேசு எம்மிடம் எதிர்பார்க்கின்றார். ஆண்டவர் இயேசுவின் வார்த்தை அனைத்தையும் செய்து முடிக்கும் என நம்பி விசுவசித்து உண்மைக் கிறிஸ்தவனாக எமது குடும்பத்தில், சமூகத்தில், எமது வேலைத்தளங்களில் அமைதியோடு பணிசெய்து வாழுவோம். அன்று அன்னை மரியாளோடும், பன்னிரு சீடர்களுடனும் ஆரம்பித்த திரு அவை இன்று பலகோடி மக்களோடு நிலைத்திருப்பதற்கு வல்லமையான அற்புதங்கள் புரிந்தவர், அற்ப பதரான எமது மூலமாகவும் அருஞ்செயல்கள் புரிந்திடுவார் என நம்பி விசுவசித்து ஏற்றுக்கொள்வோம். ஆண்டவர் இயேசு எம்மிடம் எதிர்பார்க்கும் முழுமையான அர்ப்பண வாழ்வுக்காக எம்மை அவர் திருக்கரங்களில் ஒப்படைத்துக் காத்திருப்போம்.